**இரத்தினபுரி மா நகர சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூலை 07 ஆந் திகதி சபையின் நகர ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இரத்தினபுரி மா நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கியிருந்த ரூபா 54,566,853 இற்கான கடன் தவணைப் பணத்திற்கு பதிலீடு செய்வதற்காக மா நகர சபைக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து கிடைக்க வேண்டிய வாடி வீட்டு வாடகையின் 50 சதவீதம் 2014 ஜூலை முதல் பதிலீடு செய்திருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2,785,664 தொகை அவ்வாறு பதிலீடு செய்யப்பட்டிருந்ததென கணக்காய்வினால் இனங்கண்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்காததுடன், பெற்றுக் கொண்டிருந்த மேற்கூறிய மொத்த கடன் தொகையினையும் செலுத்த வேண்டிய கடன்தொகை என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது பல்வேறு செலவு விடயங்கள் மற்றும் களஞ்சிய முற்பணத்தின் கீழ் கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 1,224,019 தொகை பெறுமதியான நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான ஆண்டின் போது செலுத்துவதற்கு இயலாதிருந்த ரூபா 2,094,259 தொகை பெறுமதியான செலவுகளுக்கான கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது 1965 நூலகப் புத்தகங்கள் நன்கொடையாகக் கிடைத்திருந்ததுடன் அவற்றில் பெறுமதி குறிப்பிட்டிருந்த 1087 புத்தகங்களின் பெறுமதி ரூபா 624,835 தொகையினை மாத்திரம் மூலதனப்படுத்தியிருந்ததுடன், மீதியான 878 புத்தகங்களின் பெறுமதியினை இனங்கண்டு அல்லது பெறுமதி மதிப்பீடு செய்து மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் மாதத்திற்கான அனுப்பப்பட வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ரூபா 119,824 தொகை என உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், ரூபா 277,469 தொகை பொறுப்பு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) பொதுவான நிருவாகம், அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் ஆகிய நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக சபையினால் பேணப்பட்டிருந்த பொழிப்பு காசேட்டின் பிரகாரம் மீதி மற்றும் நிதி நிலைமை தொடர்பாக கூற்றில் குறிப்பிட்டிருந்த மீதிகளிடையே பல வருட காலமாக வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அவ்வித்தியாசம் ரூபா 3,395,935 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றினை சமப்படுத்தல் தொடர்பாக கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய தன்மையுடைய விடயமாக இருந்தது.

(எ) 2015 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ஆரம்ப மீதியை சரிசெய்வதற்கென ரூபா 7,193,640 தொகை கணக்குகளின் மூலம் சீராக்கல்கள் செய்யப்பட்டிருந்த போதிலும், பேணப்பட்டிருந்த முத்திரைக் கட்டணப் பதிவேட்டின் படி அப் பெறுமதி ரூபா 6,674,140 ஆக வேண்டியிருந்தது.

(ஏ) ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவி இலக்கம் 1632 இன் கீழ் இரத்தினபுரி வெரளுப பாதையை அபிவிருத்தி செய்யும் கடன் தொகை ஆகிய ரூபா 12,656,450 தொகை தொடர்பாக சமர்ப்பித்திருந்த கடனை உறுதிப்படுத்தும் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 10,378,289 தொகையான வட்டித்தொகை அட்டுறு செலவு என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஐ) 11 வருமானத் தலைப்புகள் தொடர்பாக முன்னைய ஆண்டிற்காக கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 528,898 தொகையான வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்திருந்தது.

(ஒ) 12 வருமானத் தலைப்புகள் தொடர்பாக மீளாய்வாண்டு தொடர்பாக தொடர்ந்துவரும் வருடத்தில் கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 1,383,007 தொகையான வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானம் என இனங்கண்டிருக்கவில்லை.

(ஓ) 2014 ஆண்டிற்கான கணக்குகளை கணக்காய்வு செய்த போது பதவியணிக் கடன் வட்டி பெறுவனவுகள் ரூபா 739,765 தொகை உரிய வருமானத் தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும் என சுட்டிக் காட்டிய போதிலும் நாட்குறிப்புகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன், மீளாய்வாண்டிற்காகவும் பதவியணிக் கடன் வட்டி பெறுவனவுகள் ரூபா 768,661 தொகையினை உரிய வருமானத் தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யாமல் அப் பெறுமதியினையும் பதவியணிக் கடன் பெறுவனவு என பதவியணிக் கடன் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஔ) பதவியணிக் கடன் வட்டியையும் பதவியணிக் கடன் பெறுவனவு என கணக்கீடு செய்யப்படுவதினால் பதவியணிக் கடன் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 6,702,222 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களின் மூலம் கூடியது.

(க) ஊருக்கு ஊர் வீட்டுக்கு வீடு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட 03 செயற்திட்டங்கள் 2014 ஆண்டின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஜூன் 13 திகதி வரை ரூபா 1,750,851 தொகை செலுத்தியிருக்காமையால் கடன்கொடுத்தோரின் கீழ் மற்றும் குறிப்பிட்ட நிர்மாண வேலைக்காக பெறவேண்டிய வருமானத்தின் கீழ் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ங) மீளாய்வாண்டின் போது உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 4,296,449 தொகையான வெளி நிதியேற்பாடுகளுக்கான நிர்மாண வேலைகளுக்காக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கடன்பட்டோர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ச) 2014 ஆண்டின் போது உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு செய்யப்பட்டிருந்த ரூபா 4,971,813 பெறுமதியான நிர்மாண வேலைக்காக உரிய வருடத்தில் கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் செலவுகள் எனக் கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஞ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இருப்புப் பதிவேடு நாளது வரை பேணப்படாமை மற்றும் வழங்கள் கட்டளைகளின் பிரகாரம் முறைப்படி பண்டங்கள் வழங்குதல் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இருப்புப் பதிவேடுகளில் இறுதி மீதி மற்றும் கையிருப்பு பரிசோதனை செய்யும் சந்தர்ப்பம் தடைப்பட்டிருந்தது. நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 23,004,503 இற்கான கையிருப்பினை பதிவேட்டின் பிரகாரம் இனங்காண முடியாதிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 10 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் படி மீதிகளிடையே ரூபா 51,299,614 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 10 செலவு விடயங்கள் தொடர்பாக செலவுப் பகுப்பாய்வில் குறிப்பிட்டுள்ள பெறுமதி மற்றும் செலவுப் பதிவேட்டின் பெறுமதிகளிடையே ரூபா 45,098,164 இற்கான வித்தியாசம் காணப்பட்டது.

(இ) 04 வருமானத் தலைப்புகள் தொடர்பாக பதிவேட்டின் பிரகாரம் சிட்டையிடப்பட்ட வருமானம் மற்றும் ஆண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்த வருமானமிடையே ரூபா 227,785 இற்கான வித்தியாசம் காணப்பட்டது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- | --- |
| (அ) | மா நகர சபைக் கட்டளைச் சட்டம் (அதிகாரம் 252) | |
| | 247(இ) ஆம் பிரிவு | ஏதேனும் வியாபாரமொன்று ஏதேனும் மா நகர சபை அதிகாரப் பிரதேசம் ஒன்றில் ஏதேனுமொரு நபரினால் நடாத்தும் சந்தர்ப்பத்தில் அச் சபையினால் பிரேரணை ஆமோதனையின் மூலம் அந்த நபரின் விடயத்தில் வருடாந்த வரி ஒன்று விதிக்க வேண்டுமெனினும் இரத்தினபுரி வாடி வீட்டிற்காக 2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகளுக்காக அவ்வாறான அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

| | |
|---|---|
| (i) நிதிப் பிரமாணம் 396 | கணக்கு இலக்கம் 0001015721 தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 06 மாதங்களை கடந்துள்ள வழங்கப்பட்ட ஆனால் தேறப்படாத ரூபா 524,029 இற்கான 14 காசோலைகள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 571 | 20 வைப்புக் கணக்குகள் தொடர்பாக 2001 ஆண்டு முதல் காணப்படும் 02 வருடங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 23,099,511 தொகையான வைப்புக்கள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணங்கள் 880 மற்றும் 881 | சபையின் உத்தியோகத்தர் எவரிடமும் ஊழியர் பிணைப் பணம் பெற்றிருக்கவில்லை. அதன் பிரகாரம் நிதி நிருவாக விடங்களில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கள் மற்றும் இணைந்த பாதுகாப்பு தொடர்பாக திருப்தியடைய முடியாதுள்ளது. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 46,579,450 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 21,719,263 ஆகும்.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி செயற்பாட்டு மிகை ரூபா 68,298,713 இனால் அதிகரித்திருந்ததுடன் அது முன்னைய ஆண்டை விட 314 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது என அவதானிக்கபட்டது. இதற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பாக மீளாய்வாண்டின் மீண்டுவரும் வருமானங்களில் அதிகரிப்பு மற்றும் மீண்டுவரும் செலவுகளில் குறைதல் முக்கியமாக பாதித்திருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரி மற்றும் வரி | 32,500 | 32,999 | 27,198 |
| வாடகை | 62,558 | 49,376 | 19,487 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,242 | 1,814 | - |
| ஏனைய வருமானங்கள் | 240,732 | 44,225 | 32,518 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் இணக்கஞ் செய்யும் போது வீதவரி மற்றும் வரிகள், வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணம், எழுத்தாணைக் கட்டணம் மற்றும் தண்டப் பணம் மற்றும் ஏனைய வருமானங்களில் மதிப்பீட்டு வருமானத்தை விட சேகரித்த வருமானத்தில் முறையே 26 சதவீதம், 25 சதவீதம், 44 சதவீதம், 88 சதவீதம் மற்றும் 65 சதவீதத்திற்காக குறைவடைதல் காட்டப்பட்டது.

### 2.3.3 கடைகளை வாடகைக்குக் கொடுத்தல்

(அ) கடைகளை நிர்மாணிப்பதற்காக செலவாகும் மொத்த தொகையும் வாடகையாளரிடம் அறவிடப்பட்டு குறிப்பிட்ட நிர்மாணவேலை மேற்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பத்திலும் கூட கடை ஒன்று வெற்றாக இருக்கும் போது உள்ளூராட்சி ஆணையாளரின் 2009/01 ஆம் இலக்கம் மற்றும் 2009 மார்ச் 09 திகதி சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் 1.8 ஆம் பிரிவின் பிரகாரம் கடைகள் கேள்விகள் கோரப்பட்டு வாடகைக்கு கொடுத்தல் நடைபெற வேண்டியதுடன், அவ்வாறு இன்றேல் 1.9 இன் பிரிவின் படி வாடகையாளரின் இறப்பின் பின்னர் துணை அல்லது பிள்ளை ஒருவருக்கு வாடகை உரிமையை சாட்ட முடியும். அதே போல் விவாகமாகாத வாடகையாளர் ஒருவர் எனின் தாய், தந்தை அல்லது சகோதரர் ஒருவருக்கு சாட்டுதல் மேற்கொள்ளப்பட முடியும் எனினும், சுற்றறிக்கையின் அந்த பிரிவு மீது கவனம் செலுத்தாமல் கடைகளை வாடகைக்கு பெற்றிருந்த ஆரம்ப வாடகையாளரினால் பெயர் குறிப்பிட்ட வேறு நபர்களுக்கு பெயர் மாற்றப்பட்டு கடைகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தன.

(ஆ) வாடகையாளர்களுக்கு செலுத்துவதற்கு நேரிடும் வாடகைத் தொகை அதிகரித்தலை தடுத்தல் மற்றும் அவர்களின் வாடகை சுமையை குறைப்பதற்காக 2009/01 ஆம் இலக்க 2009 மார்ச் 09 ஆந் திகதி உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் ஏற்பாட்டின் படி குறைந்த பட்சம் 05 வருடங்களுக்கு ஒரு முறையேனும் குறிப்பிட்ட பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட வாடகையை திருத்த வேண்டும். எனினும், குடுகல்வத்த, வர்த்தக கட்டிடத் தொகுதியில் தரை மாடியில் 09 கடைகளின் வாடகைத் தொகை முதல் தடவையாக 1996 ஆண்டின் போது பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 19 வருடங்களுக்கு பின்னர் 2015 ஏப்ரல் 10 திகதி பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் செயற்படாமையால் ஒரே தடவை பாரிய அளவில் வாடகை அதிகரிப்பதால் வாடகையாளர்கள் வாடகை செலுத்துவதை தவிர்ந்து கொள்ளும் இடர் ஒன்று ஏற்பட்டிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 3,461,453 இற்கான காணி வரி, பொதுச் சந்தை கடை வாடகை பொதுச் சந்தை மற்றும் பொதுச் சந்தை வருமானம் என்பன சபை தீர்மானத்தின் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான வாடி வீட்டின் நிருவாகம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சாட்டப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வாடகையாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் உடன்பட்ட திகதி முதல் 20 வருடங்கள் வரை வாடிவீட்டின் முகாமைத்துவக் கட்டணம் ரூபா 70,500 முதல் வருடாந்தம் 5 சதவீதம் அதிகரிக்கும் விதத்தில் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. மா நகர சபை ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து பெற்றிருந்த கடனுக்கு பிரதியீடு செய்வதற்காக மேற்கூறிய முகாமைத்துவக் கட்டணத்தில் 50 சதவீதம் குறைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மொத்த முகாமைத்துக் கட்டணம் மா நகர சபையின் வருமானம் எனவும் கடனுக்கு பிரதியீடு செய்யும் தொகை கடன் தீர்த்தல் எனவும் கணித்தும் கணக்கீடு செய்யப்பட வேண்டும் எனினும் அந்த நிலைமை கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்கூறிய முகாமைத்துவக் கட்டணத்தில் 1995 திசெம்பர் மாதம் 10 சதவீதம் மற்றும் 2003 ஜூலை மாதம் முதல் 30 சதவீதம் ஆக நகர அபிவிருத்தி அதிகார சபை தடுத்து வைத்திருந்த போதிலும் அவ்வாறு கழிக்கப்பட்டவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2 தீ அணைக்கும் அலகின் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆகஸ்ட் 31 திகதி தீ அணைக்கும் அலகு நிறுவப்பட்டுள்ள கட்டிடத்தை பௌதீக ரீதியாக பரிசோதனை செய்தபோது முறையான கட்டுப்பாட்டு செயற்பாட்டு முறையொன்று இப் பிரிவின் மூலம் செயற்படுத்தியிருக்கவில்லை என வெளிப்படுத்தப்பட்டது. இரத்தினபுரி பகுதியில் அவசர நிலைமை ஒன்று ஏற்பட்டால் செயற்படுத்துவதற்காக போதியளவான மனித மற்றும் பௌதீக வளங்கள் தொகையொன்று தீ அணைக்கும் பகுதியில் காணப்படவில்லை எனவும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மாத்திரமின்றி இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ளூராட்சி நிறுவனத்திற்கு சொந்தமான ஒரேயொரு தீ அணைக்கும் அலகு தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தியிருக்கவில்லை எனவும் அதன் பிரகாரம் அவசர நிலைமையேற்படும் போது எதிகொள்வதற்கு போதிய வலுவுள்ளதாக காணப்படுகின்றதா என்பது கணக்காய்வின் போது கேள்விக் குறியாகவுள்ளது.

(ஆ) அவசர அனர்த்த நிலைமையொன்றின் போது பயன்படுத்துவதற்கான நீல நிற மின் குமிழ் பொருத்தப்பட்ட அனர்த்த வாகனங்கள் தீ அணைக்கும் மற்றும் மீற்கும் கருமங்களுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும் எனினும் பதிவு இலக்கம் PB 6386 இனை கொண்ட தீ அணைக்கும் வண்டி நகர ஆணையாளரின் அங்கீகாரத்துடன் பல்வேறு தேவைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்த வண்டியின் பிரயாணங்கள், ஓடிய தூரம், பெற்றுக்கொள்ளப்பட்ட எரிபொருள், கட்டளை இலக்கம் பெற்றுக்கொள்ளப்பட்ட எரிபொருளின் தொகை, குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. ஓட்ட அட்டவணைகளின் பிரகாரம் வாகனத்தை பயன்படுத்திய உத்தியோகத்தர் கையொப்பமிட்டிருக்காத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது முறையே எரிபொருளுக்காக ரூபா 173,014 மற்றும் ரூபா 219,306 தொகை

செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2015 ஆண்டின் போது 242 வேலை நாட்கள் என கணிக்கும் போது ஆண்டின் போது காணப்பட்ட எரிபொருள் விலையில் சுமார் 21464 கிலோமீற்றர் ஓடியிருந்தது. அதன் பிரகாரம் கடமை நாள் ஒன்றில் ஓடிய கிலோமீற்றர்கள் சுமார் 89 ஆகும். மேற்கூறிய விடயங்களின் படி குறிப்பிட்ட கப் வண்டிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் செலவு தொடர்பாக கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய தன்மையுள்ள விடயமொன்றாகியுள்ளது.

**3.3 வாகனப் பாவனை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஜுலை 05 திகதி அல்லது அதற்கு நெருங்கிய திகதி ஒன்றில் முறையான அங்கீகாரம் இன்றி சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரினால் PB 6386 இலக்க வாகத்தை செலுத்திய சந்தர்ப்பத்தில் திடீர் விபத்து ஒன்று ஏற்பட்டு வாகனத்தின் முன்பக்க வலது பகுதிக்கு பாரிய விதத்தில் பாதிப்பு ஒன்று ஏற்பட்டிருந்தது. மேற்கூறிய விபத்து நடைபெற்ற பின்னர் பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் மீதும் கவனம் செலுத்தாமல் நகர ஆணையாளர்கள் அங்கீகாரத்தின் மீது ரூபா 396,756 தொகையொன்று செலவிடப்பட்டு 04 நிறுவனங்களில் இருந்து உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் பழுதுபார்த்தலுக்காக நகர சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. மேற்கூறிய செலவை அணவல் செய்வதற்காக காப்புறுதிக் கம்பனியினால் ரூபா 90,836 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் மீதியான ரூபா 307,920 இற்கான நட்டம் தொடர்பாக நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை. அரச நிதிப் பிரமாணங்கள் 101 முதல் 110 வரை நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பழுதுபார்த்த பின்னர் PB 6386 இலக்கம் கொண்ட கப் வண்டி 2015 தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், 2015 ஆகஸ்ட் 18 திகதி சாரதி தேர்தல் கடமைகள் முடிவடைந்த பின்னர் வாகனத்தின் சாவியை நகர ஆணையாளருக்கு ஒப்படைத்துவிட்டு தனது கடமையை பூர்த்தி செய்திருந்தார். எனினும் பொலிஸ் அறிக்கைகளின் பிரகாரம் 2015 ஆகஸ்ட் 18 திகதி பின்னேரம் 04 மணி அல்லது அண்மித்த நேரத்தில் நகர ஆணையாளரினால் விஷேட அங்கீகாரம் ஒன்று இன்றி எஹலியகொட பதுவத்த பகுதியில் தூக்கம் ஏற்பட்டிருந்தமையால் வாகனம் பாதையை விட்டு வெளியே சென்றமையால் கப் வண்டிற்கு பலத்த சேதம் ஏற்பட்டிருந்தது என வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் விபத்தின் மூலம் ரூபா 410,350 இற்கான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்ததுடன் காப்புறுதி அணவல் மூலம் ரூபா 291,000 தொகையொன்று கிடைத்திருந்தது. இந்த விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 101 முதல் 110 வரை பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2014 மார்ச் 29 திகதி அல்லது அதற்கு அண்மித்த நாள் முதல் இலக்கம் LF-1102 கொண்ட தீ அணைக்கும் லொறி வண்டியின் குழாயின் மூலம் எரிபொருள் (பெற்றோல்) ஒழுகுதல் ஒன்று காணப்பட்டதெனவும் எரிபொருள் மிகையாக வீணாவதாக எழுத்துமூலமாகவும் வாய்மொழி மூலம் தொடர்ச்சியான அறிவித்திருந்த் போதிலும் இந்த வாகனம் தீ அணைக்கும் கடமை அல்லாத கடமைகளுக்காக ஈடுபடுத்தியிருந்ததுடன், அங்கு ஒரு சந்தர்ப்பத்தில் 2014 மே 26 திகதி பொது சந்தையை சுழவுவதற்காக ஈடுபடுத்தியிருந்த சந்தர்ப்பம் ஒன்றின் போது மிகையான எண்ணெய் ஒழுகியதன் காரணம் ஒரு மணித்தியாலத்தை விட குறைந்த காலத்தில் பெற்றோல் முடிவடைந்து மீண்டும் பெற்றோல் நிரப்பப்பட்டிருந்தது. அங்கே இரண்டு தடவைகளில் 24 பெற்றோல் லீட்டர்களைப் பெறுவதற்கு நேரிட்டது என வாகனத்தின் சாரதி ஓட்ட அட்டவணையில் எழுத்தினால் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தியிருந்தார். அவ்வாறான நிலைமையொன்று காணப்பட்ட போதிலும் குறிப்பிட்ட பம்புவின் தொடர்ந்தும் அப்படியான கடமைகளுக்கு தொடர்ச்சியாக ஈடுபடுத்தியிருந்தமையால் 2015 ஜுன்

04 திகதி அல்லது அண்மித்த நாளொன்றில் இரத்தினபுரி பொது சந்தையை கழுவிச் சுத்தம் செய்தவற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், பம்வு தீ எடுத்த பின்னர் பம்பு செயலிழந்துள்ளது. அதன் பிரகாரம் செயல் நோக்கத்திற்கு புரம்பான கவனயீனமாக சேவையில் ஈடுபடுத்தியமை காரணமாக ரூபா 384,212 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன், நட்டம் தொடர்பாக அரச நிதிப்பிரமாண் இலக்கம் 104(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) பதிவு இலக்கம் 251-2574 கொண்ட குறிப்பிட்ட கப் வண்டி 2015 ஜுன் 25 திகதி அல்லது அண்மித்த நாளொன்றில் நகர ஆணையாளரினால் அங்கீகாரம் இன்றி பிரத்தியேமாக ஓட்டிய சந்தர்ப்பத்தில் என்ஜின் மிகையாக சூடாகியமையால் செயலிழந்திருந்தது. இந்த நிகழ்வு தொடர்பாக அரச நிதிப்பிரமாணங்களின் கீழ் அல்லது வேறேதும் விசாரணை ஒன்று மேற்கொள்ளாமல் வாகனம் தளத்தில் வைத்து அதனை கழற்றி பழுதுபார்த்தல் வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இன்டிகேடர் தொடர்பு விளகியிருந்த காரணத்தினால் நடைபெற்றிருந்த இந்த நிலைமை சாரதிக்கு உடனடியாக அறியக் கூடியதாக இருந்ததெனவும் அவ்வாறான சந்தர்ப்பத்தில் உடனடியாக வாகனத்தை நிறுத்தி வைக்கக் கூடிய இயலுமை சாரதிக்கு காணப்பட்டதெனவும் இவ்வாறு என்ஜின் மிகையாக சூடாக்கப்பட்டமையால் இவ்வாறான சேதம் ஒன்று ஏற்பட்டிருந்தமை கவனயீனமாக செயற்பட்டமையால் ஏற்பட்டிருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.4 தோற்றக் கூடிய மோசடித் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஏதேனும் ஆதனம் ஒன்றிற்கு வீதவரி இலக்கம் வழங்கும் போது மற்றும் வீதவரி பேர் பதிவேடுகளில் பெயர்களை திருத்தும் போது ஆதனத்தில் வருடாந்தப் பெறுமதியின் மீது அல்லது காணி உறுதியின் பெறுமதியின் மீது அறவிடப்படும் 1 சதவீத குறிப்பிட்ட கட்டணத்திற்காக நுகர்வோருக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் நாளாந்த அறிக்கை (செடூல்கள்) தயாரிக்கும் போது கூட்டுத்தொகை ரூபா 2,313,541 தொகை ஒன்று வீண்விரய அடிப்படையில் நடந்துள்மையால் சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் மோசடி செய்யப்பட்டு போலியான பற்றுச்சீட்டுகள் வழங்குதல், பணங்கள் பெற்றுக்கொண்டவைக்கான பற்றுச்சீட்டுகளில் முதல் பிரதிகளும் காணாமல் போகச் செய்தல் மூலம் இம் மோசடிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

குடுகல்வத்த வர்த்தக கடைத் தொகுதியில் கடை இலக்கம் 06 மற்றும் 07 ஆகிய கடைகளை கேள்வி மூலம் பெற்றிருந்த வாடகையாளர் குறைந்த அளவு தொகையினை செலுத்துவதை பகிஷ்கரித்த காரணத்தினால் 2013 திசெம்பர் 05 திகதி ரூபா 41,328 தொகையொன்று செலவிடப்பட்டு மீண்டும் கேள்வி அழைக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த கேள்வி அழைத்தலுக்கு முன்னர் இலக்கம் 06 மற்றும் இலக்கம் 07 கடைகளை வாடகைக்குப் பெறுவதற்காக முறையே ரூபா 2,001,000 தொகை மற்றும் ரூபா 2,002,250 தொகை வாடகைத் தொகைக்கு அழைத்து விண்ணப்பக் கடிதம் சமர்ப்பித்திருந்த விண்ணப்பித்திரந்த கேள்விதாரர் இருவருக்கும் அவர்கள் விண்ணப்பித்திருந்த வாடகைத் தொகைக்கே கேள்வி வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் கேள்வி செய்வதற்காக செலவிடப்பட்ட பணம் பலனற்ற செலவு ஒன்றாக இருந்தது.

**3.6 ஒப்பந்த நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கடுகஸ்எல்ல நீர் தோற்றத்திற்காக நுழை பாதை – கட்டம் 1 மற்றும் 2**

(i) மேற்கூறிய நிர்மாண வேலையின் கட்டம் 1 இற்காக 2015 ஜுன் 30 திகதி ரூபா 699,410 தொகை மற்றும் 2015 ஜுன் 11 ஆம் திகதி ரூபா 1,635,249 தொகையாக அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒன்றுடன் உடன்படிக்கைகள் 02 மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், முழுச் செயற்திட்டத்திற்கான மொத்தக் கிரய மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 செப்தெம்பர் 14 திகதி சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனையின் படி பாதையில் சில மண் கியூப்கள் போடப்பட்டதைத் தவிர வேறு முன்னேற்றம் ஒன்றும் அவதானிக்கப்படவில்லை. வெளிக்கள பரிசோதனைத் திகதி அளவில் இரண்டாம் கட்ட வேலையின் உடன்பட்ட காலம் முடிவடைந்திருந்ததுடன் முதலாவது கட்டத்தின் உடன்படிக்கைக் காலம் முடிவடைவதற்கு அண்மித்திருந்த போதிலும் நிர்மாண வேலைகளில் திருப்திகரமான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்படவில்லை.

**(ஆ) சிரீபாத மாவத்தை – எகமுது இழவு வீட்டு உதவி சங்க கட்டிடம் நிர்மாணித்தல்**

(i) 04 கட்டங்களின் கீழ் பல்வேறு சந்தர்ப்பங்களில் மா நகர சபையினால் சமூர்த்தி சங்கம் ஒன்றுடன் 2014 செப்தெம்பர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் ரூபா 4,307,564 இற்கான 04 உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஐந்தாவது கட்டத்தின் கீழ் மேலும் ரூபா 1,506,529 இற்கான உடன்படிக்கை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்திருந்ததுடன் மேற்கூறிய செயற்திட்டத்திற்காக ஒட்டுமொத்த கிரய மதிப்பீடு ஒன்று தயாரித்திருக்கவில்லை. மேலும், இச் செயற்திட்டத்திற்காக முன் சாத்தியக்கூறொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், அதே போல் ரூபா 25 மில்லியன்களுக்கு குறைந்த நிர்மாண வேலைகளை கட்டங்களாகப் பிரிக்கக் கூடாது என நிதி ஆணைக் குழுவின் செயலாளரினால் சபரகமுவ மாகாண சபை பிரதான செயலாளர் விளித்த மற்றும் 2015 மார்ச் 27 ஆம் திகதிய இலக்கம் FC/SABP/M/2/2015 கொண்ட கடிதத்தின் மூலம் அறிவித்திருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் செயற்பட்டிருந்தார்.

(ii) 2015 ஜுன் 18 திகதி மற்றும் 2015 செப்தெம்பர் 14 ஆகிய திகதிகளில் தொழிநுட்ப உத்தியோகத்தருடன் மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது அங்கீகரிக்கப்பட்ட வரைபிற்கு முரணான விதமாக நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப் பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. மேலும், 2016 மார்ச் மாதம் அளவில் கட்டிடத்தின் தரை மாடியின் தளம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததெனவும் செயற்திட்டம் முடிவடையும் குறிப்பிட்ட காலம் பற்றி சான்றுபடுத்த முடியாதிருந்ததென வெளிப்படுத்தப்பட்டது. செயற்திட்டம் நீண்ட கால தாமத நிலைமை ஒன்று அவதானிக்கப்பட்டது.

## 04. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 41 செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 2,950,000 மொத்த ஏற்பாடுகளும் எத்தேவைக்கும் பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 25 செலவு விடயங்களின் ஆரம்ப ஏற்பாடுகளில் எதுவித செலவுகளும் மேற்கொள்ளப்பட்டமையால் அச் செலவு விடயங்களில் 7 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான ஏற்பாடுகள் வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) செலவுத் தலைப்புகளிடையே மாற்றங்கள் 02 இற்காக 2015 அக்தோபர் 14 மற்றும் 2015 திசெம்பர் 30 திகதிகளின் போது நிதிக் குழுவினால் அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும், 25 செலவு விடயங்கள் தொடர்பாக அத் திகதிகளுக்கு முன்னர் ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 18,128,219 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 2015 ஆண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் வருமானங்கள் என மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 63,582,900 இற்கான வருமானம் 2015 நவம்பர் 19 திகதி சபைத் தீர்மானத்தின் பிரகாரம் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன், அந்த வருமானம் தொடர்பான செலவுகளும் பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 4.2 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம்

குறைந்தளவு எதிர்வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டமொன்று மற்றும் அந்த திட்டத்திற்கு இணங்க செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.3 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்கான வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

### 4.4 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்று நிறுவப்பட்டிருந்த போதிலும், அதற்காக போதிய வசதிகள் வழங்கி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தாமை

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.6 தீர்க்கப்பட்டிருக்காத மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2015 திசெம்பர் 31 திகதி வரை கணக்கிடக் கூடிய பெறுமதி ஆகிய ரூபா 329,341,255 இற்கான 34 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்கவில்லை.

**05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்